செ. கு. எண்:68 நாள்:14.04.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இரங்கல் செய்தி – 14.4.2013

பழம்பெரும் திரைப்பட பின்னணிப் பாடகரும், பன்மொழிப் புலவரும், சிறந்த கவிஞருமான திரு. பி.பி. ஸ்ரீனிவாஸ் அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக இன்று இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிந்து ஆற்றொணாத் துயரமும், மிகுந்த மன வேதனையும் அடைந்தேன்.

பி.பி.எஸ். என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட திரு. பி.பி. ஸ்ரீனிவாஸ் அவர்கள் தெலுங்கு, மலையாளம், தமிழ், கன்னடம், இந்தி உட்பட 12 இந்திய மொழிகளில் ஆயிரக்கணக்கான பாடல்களை பாடி இசை ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். இவர் பாடிய பாடல்கள் அனைத்துமே காலத்தால் அழியா வரம் பெற்றவை. “காலங்களில் அவள் வசந்தம்”, “மயக்கமா கலக்கமா”, “நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்” போன்ற பாடல்கள் ரசிகர்களின் மனதில் இன்றளவும் நீங்கா இடம் பிடித்திருக்கின்றன. மென்மையான குரல் கொண்டு இனிமையைக் கூட்டி பாடும் புதிய பாணியை திரை உலகுக்கு கொண்டு வந்தவர் திரு. பி.பி. ஸ்ரீனிவாஸ் அவர்கள். எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவராக திறம்பட பணியாற்றியவர். தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது உட்பட பல விருதுகளுக்குச் சொந்தக்காரர்.

PBS என்ற இவரின் பெயரிலேயே Playback Singer, அதாவது பின்னணிப் பாடகர் என்ற வார்த்தைகள் அடங்கியிருப்பது இறைவன் கொடுத்த வரம். இசையோடு இவர் இரண்டறக் கலந்திருப்பதை இது எடுத்துக்காட்டுகிறது. எளிமையானவரும், பழகுவதற்கு இனிமையானவருமான திரு. பி.பி. ஸ்ரீனிவாஸ் அவர்களின் மறைவு திரைப்படத் துறையினருக்கும், இசைத் துறையினருக்கும் மட்டுமல்லாமல் எனக்கும் தனிப்பட்ட முறையில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இவருடைய இடத்தை இனி யாராலும் நிரப்ப முடியாது.

திரு. பி.பி. ஸ்ரீனிவாஸ் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**